செ.வெ.எண்.48 நாள்.18.09.2017.

திருநெல்வேலி கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

---

திருநெல்வேலி வட்டம், இராமையன்பட்டியில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை ராதாகிருஷ்ணன் அவர்கள் இன்று (18.09.2017) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள நாட்டுக் கோழி மற்றும் காடை குஞ்சு பொறிப்பகங்கள் மற்றும் கறவை பசு வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சி பண்ணையினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை மிகப்பெரிய அளவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2015ம் ஆண்டு மிக நவீன முறையில் கட்டி கொடுத்துள்ளார்கள். இங்கு கால்நடை ஆராய்ச்சி நிலையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கால்நடை தொடர்பான அனைத்து பிரிவுகளும் உள்ளது. மேலும், நாட்டுக் கோழி இனத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் தினசரி ஆயிரம் கோழிக் குஞ்சுகள் பொறிக்கும் வகையில் குஞ்சு பொறிப்பகமும் உள்ளது. விவசாய பெருமக்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள். அதனடிப்படையில், விவசாயிகளுக்கு ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் 5 ஆயிரம் கோழிகள் வளர்க்கும் திறனுடன் கோழிப்பண்ணை அமைக்க ரூ.5 இலட்சம் மான்யம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்ட கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டமும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடை பல்கலைக் கழகத்தில் வளர்க்கப்படும் ஆடு, நாட்டுக் கோழி, வெள்ள பன்றி மற்றும் முயல் உள்ளிட்டவைகளின் இறைச்சி இங்குள்ள பொதுமக்கள், வாங்கும் வகையில் விற்பனை நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் அரசு ஏழை,எளிய விவசாயிகளுக்கு நன்மை தரும் வகையில் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும், மேலும் தமிழகத்தில் வேலைவாய்ப்பினை அதிகளவில் உருவாக்கும் வகையிலான திட்டங்களும் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித்தலைவர் திருமதி.மைதிலி, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், கால்நடை மருத்துவ பல்கலைக்கழக முதல்வர் மரு.திருநாவுக்கரசு, முக்கிய பிரமுகர்கள் திரு.சுதா பரமசிவம், திரு.பரணி சங்கரலிங்கம், திரு.தச்சை கணேசராசா, திரு.ஆறுமுகம், திரு.மோகன், திரு.மாதவன், திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.கணேசன், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள் திரு.சங்கரகுமார், திரு.ஆறுமுகபெருமாள், திரு.முருகையா, திரு.பாபு மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.